# சோளிங்கர் நகராட்சி

# நிர்வாக அறிக்கை 2023–2024

**நகராட்சியின் நிலை**

இந்நகராடட்சியின் கடந்த 1981 ஆண்டில் பேரூராட்சியாக தோற்றுவிக்கப்பட்டது. அதன் பிறகு 01.11.2021– ல் இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு அரசாணை எண். 94 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 01. 11. 2021– ல் இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு தற்போது செயல்பாட்டில் உள்ளது.

**எல்லை**

இந்நநகராட்சியில் மொத்த பரப்பு 14.23 சதுர கிலோ மீட்டர் ஆகும், சோளிங்கர் மற்றும் கொண்டபாளையம் ஆகிய இரண்டு வருவாய் கிராம பகுதிகள் உள்ளது.

**மக்கள் தொகை**

இந்நகராட்சியில் 27 வார்டுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. 2011 –ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்நகரின் மக்கள் தொகை – 30856 ஆக உள்ளது. இதில் 15416 ஆண்கள் மற்றும் 15440 பெண்கள் ஆகும், இதில் படித்தவர்களின் மொத்த சதவீதம் 80. 92% சதவீதம் ஆண்கள் 47.32%, பெண்கள் 32.73% சதவீதம் , ஆக உள்ளது. இந்நகரின் 2021– ம் ஆண்டின் இடைக்கால மக்கள் தொகை 34854 ஆகும் மேலும் சுற்றுபுற கிராமங்களிலிருந்து கட்டிட வேலை மற்றும் காய்கறிகள் விற்பனை செய்ய சுமார் 4000 முதல் 5000 வரை இந்நகராட்சிக்கு தினசரி மக்கள் வந்து செல்கின்றனர்.

**மக்கள் தொகை சதவிகிதம்**

| | | |
|---|---|---|
| முஸ்லீம் | – | 12 . 97% |
| இந்து | – | 76 . 12% |
| கிருஸ்துவர் | – | 5, 77% |
| மற்றவர் | – | 0.12% |

**குடிநீர் விநியோகம்**

இந்நகராட்சியில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டம் பொன்னை ஆற்றிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது. இந்நகரிலுள்ள குடியிருப்புகளுக்குகேற்ப அவ்வப்போது திட்டம் விரிவுப்படுத்தப்பட்டு தற்போது 3 நீர்தேக்கத்திலிருந்து நகருக்கு குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

மேலும் தினசரி நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 90 லிட்டர் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

**<u>மன்றக் கூட்டங்கள்</u>**

அறிக்கை ஆண்டில் 8 சாதாரணக் கூட்டங்களும் 6 அவசர கூட்டங்களும் நடத்தப்பட்டுள்ளன.

**<u>நியமன குழு கூட்டங்கள்</u>**

அறிக்கை ஆண்டில் இரண்டு நியமன குழு கூட்டங்கள் நடைபெற்றுள்ளது அறிக்கை ஆண்டில் கூட்டத்திற்கு ஆணையாளர் அவர்களே தனி அலுவலராக பொறுப்பு வகித்துள்ளார்.

**<u>ஆணையாளர்</u>**

| | | |
|---|---|---|
| 1. | திரு.இரா.பரந்தாமன் ஆணையாளர் | 17.12.2021 முதல் 31.03.2021 வரை |
| 2. | திருமதி.மி.ச.ப்ரீத்தி, ஆணையர் | 09.01.2023 முதல் 24.05.2023 வரை |
| 3. | திருமதி.ஆர்.லதா, ஆணையர் (கூ.பொ)<br>அரக்கோணம் நகராட்சி | 25.05.2023 முதல் 25.06.2023 வரை |
| 4. | திரு.ஏ.டி.ஆசிர்வாதம்,பொறியாளர் மற்றும் ஆணையர் (பொ) | 26.06.2023 முதல் 04.07.2023 வரை |
| 5. | திரு.ஜெ.விநாயகம், ஆணையர் (கூ.பொ)<br>இராணிப்பேட்டை நகராட்சி | 05.07.2023 முதல் 17.07.2023 வரை |
| 6. | திரு.பா.கன்னியப்பன், ஆணையர் | 28.08.2023 முதல் 04.10.2024 வரை |

**<u>அரசு கல்லூரிகள்</u>**

இந்நகராட்சிக்குட்ப்பட்ட பகுதிகளில் கீழ்கண்டவாறு அரசு மற்றும் தனியார் கல்லூரிகள் மற்றும் பள்ளிகள் இயங்கி வருகின்றன.

கலை மற்றும் அறிவியல் அரசு கல்லூரி

**நகராட்சி பள்ளிகள்.**

1. ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி, திருத்தணி சாலை, பில்லாஞ்சி, சோளிங்கர்
2. ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி, செங்குந்தர் பெரிய தெரு, சோளிங்கர்
3. ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி, எசையனூர், சோளிங்கர்
4. ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, மோட்டூர், சோளிங்கர்
5. ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி, ஸ்ரீராம் நகர், சோளிங்கர்

**நூலகங்கள்**

அறிக்கை ஆண்டில் அரசின் பராமரிப்பில் உள்ள ஒரு நூலகம் செயல்ப்பட்டு வருகின்றது.

**விளையாட்டு மைதானம்**

இந்நகராட்சி பராமரிப்பில் விளையாட்டு மைதானங்கள் ஏதும் இல்லை. தனியார் பராமரிப்பில் ஏதுமில்லை.

**வருவாய் தக்க வரியினங்கள்**

அறிக்கை ஆண்டில் வருவாய் ரூ.671.00 இலட்சம் வரவாக வந்துள்ளது. அதில் செலவினம் ஊதியம், இதரப்படிகள், தெருவிளக்கு குடிநீர் விநியோகம் மற்றும் இதர செலவிங்களுக்கு ரூ.691.00 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**1.சொத்து வரி**

வருட வாடகை மதிப்பில் (companent Tax) கீழ் சொத்துவரியானது கிழ்கண்டவாறு பொது காரியங்களுக்கு பிரிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 1.பொது வரி (General Tax) | 5% |
| 2. குடிநீர் மற்றும் பாதாள சாக்கடை வரி (Water charge and Drainage charges) | 3% |
| 3.நுலக வரி(Library Ceses) | 2% |
| **மொத்தம்** | 10% |

2023–2024 ம் ஆண்டில் சொத்துவரி தலைப்பின்கிழ் கேட்பாக ரூ.154.15 இலட்சம் நிர்ணயிக்கப்பட்டு அதில் ரூ.140.86 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது. நிலுவையாக ரூ.13.29 இலட்சம் உள்ளதை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் அறிக்கை ஆண்டில் மொத்த வரி வதிப்புகளின் எண்ணிக்கை 9500 ஆகும்.

**காலியிட வரி**

அறிக்கை ஆண்டில் காலியிட வரி 01.04.2023 முதல் அரசு நிர்ணயித்த அடிப்படையில் மண்டலம் வாரியாக காலியிட வரி நிர்ணயம் செய்யப்பட்ட கீழ்க்கண்ட விகிதிச்சார அடிப்படையில் வசூலிக்கப்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| 1 | Zone A | 0.40 பைசா |
| 2 | Zone B | 0.30 பைசா |
| 3 | Zone C | 0.20 பைசா |

**வரியில்லா இனங்கள்**

அறிக்கை ஆண்டில் வரியில்லா இனங்களின் கிழ் கோட்பாக ரூ.161.30 இலட்சம் நிர்ணயிக்கப்பட்டு அதில் ரூ.87.48 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது.

அறிக்கை ஆண்டில் வரியில்லா இனங்களின்கீழ் கீழ்க்கண்ட இனங்கள் உள்ளது.

| | |
|---|---|
| வாராச்சந்தை | –1 |
| தினசரி நாளங்காடி | –1 |
| வணிக வளாகம் | –10 |
| மீன் இறைச்சி கடைகள் | –2 |
| ஆடு தொட்டி | –1 |
| சமுதாய கூடம் | –1 |
| தங்கும் விடுதி | – 1 |

**தொழில் வரி**

அறிக்கை ஆண்டில் கேட்பாக 54.95 இலட்சம் நிர்ணயிக்கப்பட்டு ரூ.51.00 இலட்சம் வசூலிக்கப்பட்டு நிலுவையாக ரூ.3.95 இலட்சம் உள்ளது. நிலுவையை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**குடிநீர் கட்டணம்**

2023–2024–ம் அறிக்கை ஆண்டில் குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டு வருகிறது. தற்பொழுது 5336 இணப்புகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. இவ்விணைப்புகளுக்கு வீட்டு உபயோகத்திற்காக ரூ. 1200/–ம் நிர்ணயிக்கப்பட்டு வசூலிக்கப்பட்டு வருகிறது.

இந்த அறிக்கை ஆண்டில் குடிநீர் கட்டண கேட்பாக ரூ.149.93 இலட்சம் நிர்ணயம் செய்யப்பட்டு. ரூ.54.49 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள ரூ.95.44 இலட்சம் நிலுவை தொகை வசூலித்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

**<u>பொதுப்பிரிவு</u>**

அறிக்கை ஆண்டில் பொது பிரிவின் கீழ் கண்ட அலுவலர்கள் பணிபுரிந்து வருகிறார்கள்.

**<u>பொது பிரிவு</u>**

| | | |
|---|---|---|
| 1 | மேலாளர் | 1 |
| 2 | கணக்கர் | 1 |
| 3 | உதவியாளர் | 1 |
| 4 | இளநிலை உதவியாளர் | 5 |
| 5 | வருவாய் ஆய்வாளர் | 1 |
| 6 | வருவாய் உதவியாளர்கள் | 3 |
| 7 | பதிவறை எழுத்தர் | 1 |
| 8 | அலுவலக உதவியாளர்கள் | 3 |
| | **மொத்தம்** | **16** |

**<u>பொதுசுகாதார பிரிவு</u>**

அறிக்கை ஆண்டில் கீழ்க்ண்ட துப்புரவு ஆய்வாளர் பணிப்புரிந்துள்ளார்

| | | |
|---|---|---|
| 1 | சுகாதார ஆய்வாளர் | 1 |
| 2 | சுகாதார மேற்பார்வையளார் | 4 |
| 3 | களப்பணி உதவியாளர் | 1 |
| 4 | துப்புரவு பணியாளர்கள் | 23 |
| | **மொத்தம்** | **29** |

**<u>பொறியியல் பிரிவு</u>**

அறிக்கை ஆண்டில் பொறியியல் பிரிவில் கீழ்கண்ட பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள்.

| | | |
|---|---|---|
| 1 | நகராட்சி பொறியாளர் | 1 |
| 2 | பொது பணி மேற்பார்வையாளர் | 1 |
| 3 | பணி ஆய்வாளர் | 1 |
| 4 | குழாய் பொருத்துனர் நிலை II | 1 |
| 5 | மின் பணியாளர் நிலை II | 1 |
| 6 | குளக்காவலர் | 2 |
| 7 | மேநீர் தேக்க தொட்டி காவலர் | 1 |
| | **மொத்தம்** | **8** |

**மருத்துவமனைகள்**

அறிக்கை ஆண்டில் ஒரு அரசு மருத்துவமனையும், அரசு மருத்துவமனை அருகில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையமும் உள்ளது. மேலும் 8 தனியார் மருத்துவமனைள் செயல்ப்பட்டு வருகிறது.

**பிறப்பு இறப்பு**

அறிக்கை ஆண்டில் துப்பரவு ஆய்வாளரே பிறப்பு இறப்பு பதிவாளராக பணிப்புரிந்து வருகிறார். அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் நிகழும் பிறப்பு இறப்பு மற்றும் இறந்து பிறந்தவைகளை உடனுக்குடன் பதிவு செய்யப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகிறது. அதில் 88 பிறப்புகளும் 180 இறப்புகளும் பதிவு செய்யப்பட்டு இறந்து பிறந்த குழந்தைகள் பதிவு எதுவும் இல்லை.

**உணவு கலப்பட சட்டம்**

உணவு தர பரிசோதனை பணியிடம் இந்நகராட்சியில் எதுவும் இல்லை. மேலும் நகராட்சி துப்புரவு ஆய்வாளரால் உணவு கலப்பட தடுப்பு சட்டத்தின் கீழ் தேனீர் கடைகள், சிற்றுண்டிகள், மளிகை கடைகள், வியாபாரங்கள் ஆகிய இனங்களுக்கு சுகாதார ஆய்வாளரால் உரிமம் வழங்கப்பட்டு வருகிறது.

**அச்சம் மற்றும் அருவருக்க தக்க உரிமம்**

1920-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகளின் சட்டத்தின் 5-வது பிரிவிலுள்ள எல்லா வியாபாரங்களுக்கும் பிரசுரம் செய்யப்பட்டு அவைகளுக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் D & O உரிமங்களின் எண்ணிக்கை 96 ஆகும். இதில் ரூ.0.69 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது.

**மயானங்கள்**

1. இந்துக்கள் மயானம் – 8
2. முஸ்லீம்கள் மயானம் – 1
3. கிருஸ்துவர் மயானம் – 1

**வாகனங்களின் விபரம்**

1. டிராக்டர் – 1
2. ஈப்பு வாகனம் – 3
3. ஆட்டோ(LCV) – 8
4. டிப்பர் லாரி – 1

13

நகராட்சி ஆட்டோக்கள் மூலமாக திடக்கழிவுகள் அன்றாடம் நகரில் சேகரமாகும் குப்பை, மக்காத குப்பைகளை 8 BOV, 8 LCV, 1 டிராக்டர் , 1 மினி டிப்பர் லாரி மூலம் சேகரிக்கப்பட்டு வளம் மீட்பு பூங்கா உரகிடங்கிற்கு கொண்டு செல்லப்படுகிறது. உரகிடங்கு அமைந்துள்ள இடம் நகராட்சிக்கு சொந்தமானது.

நகராட்சி எல்லைக்குள் 6 எண்ணிக்கை சமுதாய கழிப்பிடங்கள் பராமரிக்கப்பட்டு வருகிறது. நகரின் அனைத்து பகுதிகளிலும் நகராட்சி வாகனங்கள் மூலம் 11.5 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் உரக்கிடங்கிற்கு கொண்டு செல்லப்பட்டு வருகிறது.

மருத்துவ கழிவுகள் அனைத்தும் இந்திய மருத்துவ கழக KENBIOLINK மூலமாக பாதுகாக்கப்பட்ட வண்டிகள் மூலம் எடுத்து செல்லப்பட்டு உரிய முறையில் அழிக்கப்படுகிறது.

இந்நகராட்சியில் ஆடுகள் தனியாக உள்ள வதைகூடத்தின் மூலம் ஏலத்தின் அடிப்படையில் ஒப்படைப்பு செய்து பராமரிக்கப்பட்டு வருகிறது.

**<u>சாலைகள்</u>**

இந்நகராட்சியில் பகுதியில் 38.010 கிலோமீட்டர் நீளத்திற்கு சாலைகள் கீழ்கண்டவாறு பராமரிக்கப்பட்டு வருகிறது.

1) தார் சாலைகள் – 8.83 கிலோமீட்டர்
2) சிமெண்ட் சாலைகள் – 23.76 கிலோமீட்டர்
3) மண் சாலைகள் – 5.31கிலோமீட்டர்

**<u>நிதிகள்</u>**

அறிக்கை ஆண்டில் மத்திய அரசு மற்றும் மாநில அரசு, மாவட்ட ஆட்சியர் இராணிப்பேட்டை அவர்கள் மூலமாக கீழ்கண்டவாறு பராமரிக்கப்பட்டு வருகிறது.

| வ.எண் | நிதி விபரம் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|---|
| 1 | 15th CFC | Relaying of Road-Cement Concrete Road0174025R297-JANAKIRAM NAGAR 4 TH STREET , 0174014R116-SAGADEVA MUDALI STREET , 0174014R129-A.C.M.NAGAR 4 TH CROSS STREET , | 15,00,000 |

| | | | |
|---|---|---|---|
| 2 | 6th SFC GRANT | Construction of New Shopping Complex at Ward No.23, S.F.No.774/2, in Sholinghur Municipality | 33,00,000 |
| 3 | SBM 2.0 | Construction of 3TPD Material Recovery Facility Center at Existing Compost yard located in Kondapaliyam Survey No.22 in Sholinghur Municipality | 25,50,000 |
| 4 | SBM 2.0 | Construction of Community Toilet at Essaiyanoor Ward 15 in Sholinghur Munucipality | 18,00,000 |
| 5 | SBM 2.0 | Construction of 6TPD Micro Compost Center at Existing Compost yard located at Kondapaliyam ward No.27 in Sholinghur Municipality | 69,00,000 |
| 6 | 15th CFC HEALTH | Construction of Additional Buildings for GH Sholingur | 5,00,00,000 |
| 7 | KALAIGNAR NAGARPURA MEMBATTU THITTAM | Improvement of Water supply projects in Sholingar Municipality | 47,58,00,000 |
| 8 | SBM 2.0 | Construction of Urinal at Appankara kulam , Ward No 23 in Sholinghur Municipality | 1,28,000 |
| 9 | 6th SFC GRANT | Additional Shopping Complex at Weekly Market area in Sholinghur Municipality | 35,00,000 |
| 10 | SBM 2.0 | Purchae of Cesspool Tanker1No.In Sholinghur Municipality | 43,25,000 |
| 11 | NAMAKKU NAAME THITTAM | Formation of New Road-Earthern to PaverBlock0174027S015-VISHNU GARDEN 1ST STREET | 8,00,000 |
| 12 | OTHERS | Construction of Top Storey Existing Library Building at ward no.17, Post office street in Sholinghur Municipality | 22,00,000 |
| 13 | NAMAKKU NAAME THITTAM | Formation of New Road-Earthern to PaverBlock0174022R254-A.M.V.NAGAR 1ST ROAD , | 6,50,000 |
| 14 | SBM 2.0 | Construction of Urinal Block in Weekly Shandy in Ward No1. at Sholinghur Municipality. | 1,60,000 |

## தெரு விளக்குகள்

இந்நகராட்சியில் 1 மின் பணியாளர்கள் மூலமாக கீழ்க்கண்ட விவரப்படி தெரு விளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

| வ.எண் | விளக்குகளின் விவரங்கள் | எண்கள் |
|---|---|---|
| 1 | குழல் விளக்குகள் | 285 |
| 2 | சோடியம் ஆவி விளக்குகள் | 50 |
| 3 | CFL விளக்குகள் | 45 |
| 4 | உயர் மின் கோபுர விளக்குகள் | 5 |
| 5 | LED விளக்குகள் | 750 |
| | **மொத்தம்** | **1135** |

## பாதாள சாக்கடை திட்டம்

இந்நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் ஏதும் இல்லை.

## நகரமைப்பு பிரிவு

அறிக்கையாண்டில் திரு.அல்லிமுத்து நகரமைப்பு ஆய்வாளராக பணி புரிகிறார். நகரமைப்பின் பிரதான பணிகள் கட்டிடம் கட்ட அனுமதி கோரும் விண்ணப்பளை பரிசீலித்தல், விளம்பர போர்டுகள் அமைக்க கோரும் விண்ணப்பங்களை பரிசீலித்ததின் மீது நடவடிக்கை எடுத்தல், கட்டிட வரம்பு நிர்ணயித்தல் அதனை அமுல்படுத்துதல் ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் நில ஆர்ஜித சட்டத்தின் மூலம் (கையகப்படுத்தல்) அரசு நிலங்களை பாராதீனம் பெறுதல் நகரமைப்பு திட்டம் தயாரித்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சோளிங்கர் நகராட்சியில் அங்கீகரிக்கப்பட்ட நகரமைப்பு திட்டங்கள் ஏதும் இல்லை.

**கட்டிட அனுமதி அளிக்கப்பட்ட விவரம் (2023-2024)**

| | |
|---|---|
| கட்டிட அனுமதி கோரி வந்தவை | 111 |
| அனுமதி அளிக்கப்பட்டவை | 98 |
| அனுமதி மறுக்கப்பட்டவை | - |
| திருப்பி அனுப்பப்பட்டவை | 03 |
| மேல்முறையீடு செய்தவை | - |

மாவட்ட ஆட்சி தலைவர் இராணிப்பேட்டை அவர்களின் உத்தரவின்படி அனுமதியற்ற விளம்பர பலகைகள் மற்றும் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு வருகிறது.

## <u>தணிக்கை</u>

2022–2023 ம் ஆண்டு வரை தணிக்கைத்துறையினரா 194 பத்திகள் நிலுவையாக உள்ளது. மேலும் தணிக்கை அறிக்கையின் மீது உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை, வேலூர், அவர்களால் தணிக்கை முடிவு மிகவும் திருப்திகரமாக உள்ளது என சான்றளிக்கப்பட்டது.

## <u>பொது</u>

நடப்பு ஆண்டில் வார்டுகள் 1 முதல் 27 வரையிலான பகுதிகளுக்கு தட்டுபாடு இன்றி பாதுகாக்கப்பட்ட குடிநீர் சீராக விநியோகிக்கப்பட்டது. மேலும் நகரின் சுகாதார நிலைமை பொதுவாக திருப்திகரமாக இருந்தது.

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை, நகராட்சி மண்டல நிர்வாக இயக்குநர், வேலூர் (ம) மாவட்ட ஆட்சியர், இராணிப்பேட்டை, அவர்களால் நிர்வாகம் சிறப்பான முறையில் செயல்படவும் திட்டங்களில் பணிகளை செய்வதற்கு அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்தும் அவ்வப்போது உரிய உத்தரவு மற்றும் அறிவுரை வழங்கியும் வந்தார்கள்.

நகராட்சி நிர்வாகத்தை செவ்வனே நடத்த ஆணையாளர் மற்றும் அனைத்து அலுவலர்கள் மற்றும் பணியாளர்களும் முழுமையான ஒத்துழைப்பினை நல்கியுள்ளதால் நகராட்சியின் நிர்வாகம் சிறப்பாக இருந்தது.

………………